# இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

## விண்ணப்பங்களுக்கான அழைப்பு

## துணைவேந்தர் பதவி

இலங்கை, சபரகமுவ பல்கலைக்கழகத்தின் பேரவையானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34 (1) (க) பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் (இலங்கைப் பிரசையாகவும் விண்ணப்ப முடிவுத் திகதியில் 63 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்) கோரப்படுகின்றன.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் முழுநேர உத்தியோகத்தர் ஆவார். அவர் பல்கலைக்கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பிரதம கல்விசார் அதிகாரியும், கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். அவர் பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை ஆகியவற்றின் பதவி வழி உறுப்பினரும், தலைவரும் ஆவார்.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், துணைவேந்தர் குறித்த பதவி காலத்திற்கு முன்னதாக அவர் பதவியிலிருந்து வெளியேறாவிடின் அல்லது நீக்கப்படாவிடின், மூன்று வருடங்கள் அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்தி செய்யும் தினம், இவ்விரண்டில் எது முன்வருகின்றதோ அது வரை பதவி வகிப்பார்.

துணைவேந்தர்; கல்விக்கான தலைமைத்துவத்தினை வழங்குதல், முகாமைத்துவக் கொள்கைகளை உருவாக்குதல், நடைமுறைப்படுத்துதல் அறிமுகப்படுத்துதல், மற்றும் பேரவைகளின் முடிவுகளை அமுல்படுத்துதல் என்பவற்றுடன் பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகத்திற்கும் பொறுப்பானவர் என்பதனால் சிறந்த கல்விக் கொள்கை, வெளிப்படைத் தன்மை, பொறுப்புக் கூறல், ஜனநாயக முகாமைத்துவம், பாரபட்சமற்ற சிறந்த தலைமைத்துவம் போன்ற பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் வலுவான ஆய்வுப்பின்னணி, தலைமைத்துவத்தினை நிரூபிக்கும் தகுதிகள், பரந்துபட்ட தொடர்புடையவர்களுடன் சிறந்த தொடர்பாடல் திறன், கொள்கை விடயங்கள் தொடர்பாக சிறந்த தெளிவான புரிந்துணர்வு மற்றும் தீர்மானங்களை செயற்றிறன்மிக்க முறையில் அமுல்படுத்தும் திறமைகளுடன் உயர்கல்வியடைவுப் பின்புலத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும். அவர் சமூகத்திற்கான பொறுப்புணர்வு உட்பட பல்கலைக்கழகத்தின் நெறிமுறை மற்றும் செயல்நோக்கு தொடர்பாக ஆழமான புரிந்துணர்வினைக் கொண்டிருத்தல் வேண்டும். (விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பல்கலைக்கழக இணையத்தளமான https://www.sab.ac.lk இற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். துணைவேந்தர் தெரிவு முறைமை தொடர்பிலான தகவல்களை அறிந்துகொள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட 10.04.2023 ஆம் திகதிய ஆணைக்குழு சுற்றறிக்கை எண். 03/2023 ஐப் பார்க்கவும்).

துணைவேந்தர் பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்தில் அதிஉயர் சம்பளத்தை பெற உரித்தடையவர் என்பதோடு, பதவிக்குரிய பிற கொடுப்பனவுகள் மற்றும் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் உரித்துடையவராவர்,

- முழு வசதிகளுடன் கூடிய தங்குமிடம்
- மாதம் ஒன்றுக்கு 145 லிட்டர் எரிபொருள் கொடுப்பனவுடன் கூடிய வாகனம்
- அதிகபட்சம் 6000 ரூபாய் மாதாந்த தொலைபேசி கட்டணம்
- மாத அடிப்படை சம்பளத்தில் 15% உபசரணைக் கொடுப்பனவு

விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

I. விண்ணப்பதாரரின் முழுமையான தகவல்கள் மற்றும் பிறந்த திகதி உள்ளடங்கிய சுயவிபரப்பட்டியல்

II. விண்ணப்பதாரர் துணைவேந்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தியின் பொருட்டு அவர் முன்மொழியும் தனிப்பட்ட 'தூரநோக்குக் கூற்று' மற்றும் சாதிக்க முனையும் விடயங்கள் தொடர்பான சுருக்கக் குறிப்பு

III. விண்ணப்பதாரர் இப்பல்கலைக்கழகத்தினது தற்போதைய துணைவேந்தர் எனின் அல்லது முன்னர் துணைவேந்தர் பதவி வகித்தவர் எனின் மேலே குறிப்பு II இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களிற்கு மேலதிகமாக அவர் தன்னுடைய பதவி காலத்தில் சாதித்த விடயங்கள் மற்றும் அடைவுகள் பற்றிய அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

IV. விண்ணப்பதாரர் அரச பொதுச்சேவை, கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள், சபரகமுவ பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர் கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் ஏதேனும் ஒன்றில் சேவை புரிபவராயின், அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படும் பட்சத்தில் அவரை விடுவிக்க இயலுமா என்பதைத் தெரிக்கும் வகையில் தொழில்தருனரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடிதம்.

விண்ணப்பங்கள் "சமன் உயங்கொட, பதிவாளர் மற்றும் பேரவையின் செயலாளர், பதிவாளர் அலுவலகம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், த.பெ. இல- 02, பெலிஹுல்லோயா" என முகவரியிடப்பட்டு 30.06.2023 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத் தபால் மூலமாக அல்லது ஏதேனும் வேலை நாள் ஒன்றில் பதிவாளர் அலுவலகத்திற்கு நேரடியாகச் சென்று கையளித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்கள் அடங்கிய கடித உறையின் மேல் இடது மூலையில் "துணைவேந்தர் பதவி" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். மேலும், மேற்குறிப்பட்ட ஆவணத்தின் மென் நகல் கையடக்க ஆவண வடிவமைப்பு (PDF) வடிவில் பதிவாளர் அலுவலகத்தின் registrar@sab.ac.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

துணைவேந்தர் பதவிக்கு தகுதியான அனைத்து விண்ணப்பதாரர்களும் பேரவையின் மதிப்பீடு மற்றும் நேர்காணலுக்கான குறைந்தபட்சம் பத்து (10) நிமிடங்கள் எனினும் பதினைந்து (15) நிமிடங்களுக்கு மேற்படாத சுருக்கமான முன்னளிப்பு ஒன்றின் பொருட்டு விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் இரண்டு மாதங்களுக்குள் நடைபெறும், விசேட பேரவைக் கூட்டமொன்றிற்கு நேரில் அழைக்கப்படுவார்கள்.

தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக விண்ணப்பதாரி எவருக்கேனும், விசேட கூட்டத்திற்கு நேரடியாக சமூகமளிக்க முடியாத நிலை காணப்படும் பட்சத்தில், அவர் செயலாளருக்கு முன்னறிவிப்பு செய்திருப்பின், மெய்நிகர் முறையினூடாக (Virtual mode) பங்கேற்க அனுமதிக்கப்படுவார். விண்ணப்பதாரர் எவரும் குறிப்பாக பேரவையின் உறுப்பினராக இருப்பினும் விசேட கூட்டம் நடைபெறும் இடத்தில் தங்கவோ அல்லது பிற விண்ணப்பதாரர்களின் முன்னளிப்பை செவிமடுக்கவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

பேரவையின் ஒவ்வொரு உறுப்பினரும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 10.04.2023 ஆம் திகதிய ஆணைக்குழு சுற்றறிக்கை 03/2023 இன் மதிப்பெண்தாளில் பரிந்துரைக்கப்பட்ட ஏழு நியதிகள் மற்றும் கூறுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக 0-10 என்ற அளவுகோல் அடிப்படையில் மதிப்பெண்களை வழங்குவதன் மூலம் ஒவ்வொரு விண்ணப்பதாரியையும் சுயமதிப்பீடு செய்வர்.

பேரவையின் ஒவ்வொரு உறுப்பினராலும் ஏழு நியதிகளின் கீழ் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த மதிப்பெண்களின் சராசரியாக ஒவ்வொரு விண்ணப்பதாரருக்குமான மொத்த மதிப்பெண், கணக்கிடப்படும். பேரவையின் அனைத்து உறுப்பினர்களும் கையொப்பமிட்ட இறுதி மதிப்பெண்தாளின் அடிப்படையில், ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பெற்ற மதிப்பெண்களின் வரிசையில் மூன்று (3) பெயர்களின் பட்டியல் பேரவையின் ஒவ்வொரு உறுப்பினரும் கையெழுத்திட்ட மதிப்பெண்கள் உள்ளடங்கலாக துணைவேந்தர் நியமனத்திற்காக விசேட பேரவைக் கூட்டத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை, நியமனத்திற்கான பரீசீலினை நடவடிக்கைகளின் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள மேற்படி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை மற்றும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34(1) பிரிவின் பிரகாரம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும்.

சமன் உயங்கொட,
பதிவாளர் மற்றும் பேரவையின் செயலாளர்,
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுல்லோயா,
30.04.2023